பாரதியார் பல்கலைக்கழகம்

# BHARATHIAR UNIVERSITY

## COIMBATORE – 641 046, TAMILNADU, INDIA

| State University | Accredited With A++ Grade - 3.63 CGPA by NAAC | 21st Rank among Indian Universities by MoE-NIRF |


R/ B3-B4/EXTENSION - LAST DATE FOR ADMISSION /2025 Date: 02.09.2025

| From | To |
| --- | --- |
| The Registrar | The Principals of all the colleges affiliated to Bharathiar University. |

Sir/Madam,

Sub: Extension of Last Date for U.G. / P.G. (Including MBA & MCA) degree courses – 2025 -2026 – Informing of - Regarding.

Ref: 1. R/ B3-B4/LAST DATE FOR ADMISSION DETAILS/2025, Dt.04.08.2025.
2. Letter no. 8049/ A3/2025, Dt.01.09.2025, from RJD-Coimbatore.

***

Apropos to the above it is informed that the last date for admission of candidates to all U.G. / P.G. (including MBA & MCA) degree courses offered in all the affiliated Colleges for the academic year 2025 - 2026 is extended as follow to ensure 100% admission under நான் முதல்வன் திட்டத்தின் கீழ் கல்லூரிக் கனவு மற்றும் உயர்வுக்ப்படி scheme.

| Name of the degree | Last date for admission |
| --- | --- |
| U.G. P.G. (including MBA/MCA) | **15.09.2025** |

**It is also informed that the last date for remittance of Academic Fees along with Student Data base is 22.09.2025**

REGISTRAR BHARATHIAR UNIVERSITY COIMBATORE 641 046.

K. S[illegible]
REGISTRAR
For 02/09/25

Copy to:
1. Vice-Chancellor's table.
2. Registrar's table.
3. The Controller of Examinations, B.U.

**கல்லூரிக் கல்வித் துறை**

**அனுப்புநர்**
முனைவர். நா.செண்பகலெட்சுமி,
எம்.ஏ.,எம்.ஏ.,எம்.எஸ்சி., பி.எட்.,எம்.ஃபில்.,பிஎச்டி.,(நெட்)
கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்,
கோவை மண்டலம், கோவை -18

**பெறுநர்**
பதிவாளர்,
பாரதியார் பல்கலைக்கழகம்,
கோவை – 46.

ந.க.எண். 8049/அ3/2025 நாள். 01.09.2025

அய்யா,

**பொருள்:** கல்லூரிக் கல்வித் துறை – **உயர்வுக்குப் படி** – கோவை, பாரதியார் பல்கலைக்கழக இணைவு பெற்ற கலை அறிவியல் கல்லூரிகளில் 2025-2026-ஆம் ஆண்டிற்கான இளநிலை மாணவர் சேர்க்கை இறுதி நாளினை நீட்டிக்கக் கோருதல் – தொடர்பாக.

**பார்வை:**
1. தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் அவர்களின் நேர்முக கடிதம் எண். 753/அ1/2025, நாள். 15.05.2025.
2. தமிழ்நாடு அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் , சிறப்பு திட்ட செயலாக்கத் துறை அவர்களின் நேர்முக கடிதம் எண். 244/SPI/2025, நாள். 06.08..2025.
3. கோவை, பாரதியார் பல்லைக்கழக பதிவாளரின் கடிதம் எண். R/B3-B4/Last date for admission details/2025, நாள். 04.08.2025.

------

பார்வை (1) மற்றும் (2)-இல் காணும் கடிதங்களின்படி, 12-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்கள் அனைவரும் 2025-2026-ஆம் கல்வியாண்டில் 100 சதவீதம் உயர்கல்வி சேர்க்கை பெறுவதை உறுதி செய்யும் விதமாக **நான் முதல்வன் திட்டத்தின் கீழ் கல்லூரிக் கனவு மற்றும் உயர்வுக்குப்படி** ஆகிய நிகழ்ச்சிகள் நடத்தப்பட வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோவை மண்டலத்திற்குட்பட்ட கோவை, திருப்பூர், ஈரோடு மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களில் செப்டம்பர் 2025-ம் மாதத்தில் உயர்வுக்குப்படி முகாம்கள் நடத்துவதற்கான இடம் மற்றும் நாள் சார்ந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் இறுதி செய்யப்பட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இம்முகாம் நடைபெறும் நாட்களில் கலை அறிவியல் கல்லூரிகள் சார்பாக முகாம் நடைபெறும் இடங்களில். மாணவர் சேர்க்கைக்கான Stall-கள் அமைக்கப்பட்டு மாணவர் சேர்க்கை நடத்தவும் (Spot Admission) தெரிவிக்கப்பட்டுள்ளது.

...2

பார்வை (3)-இல் காணும் தங்களின் கடிதத்தில் கோவை, பாரதியார் பல்கலைக்கழக இணைவு பெற்ற கல்லூரிகளில் 2025-2026-ஆம் கல்வியாண்டில் இளநிலை மாணவர் சேர்க்கைக்கான இறுதி நாள் 30.08.2025 என்று தெரிவிக்கப்பட்டு கல்லூரிகளுக்கு சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

எனவே 12-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்கள் அனைவரும் 2025-2026-ஆம் கல்வியாண்டில் 100 சதவீதம் உயர்கல்வி சேர்க்கை பெறுவதை உறுதி செய்யும் விதமாக, **நான் முதல்வன் திட்டத்தின் கீழ் உயர்வுக்குப்படி** முகாம்களை நடத்த ஏதுவாக கோவை, பாரதியார் பல்கலைக்கழக இணைவு பெற்ற கலை அறிவியல் கல்லூரிகளில் இக்கல்வியாண்டின் இளநிலை மாணவர் சேர்க்கைக்கான இறுதி நாளினை **15.09.2025** வரை நீட்டித்து வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

01/09/2025

**கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்,**
**கோவை மண்டலம், கோவை -18**

**நகல்.-**

1. **கல்லூரிக் கல்வி ஆணையர்,**
   **கல்லூரிக் கல்வி இயக்ககம்,**
   **சென்னை – 15.**

2. மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
   கோவை, திருப்பூர், ஈரோடு மற்றும்
   நீலகிரி மாவட்டம்.